பதிவு எண்: M. 6311 ★ தொலைபேசி: 51331 நிறுவியது: 1953 ★ விலை 7 காசு ★ இலங்கையில் 10 சதம்

நம்நாடு

The 'Nam Nadu' — A Tamil Daily
The Official Organ of the D. M. K.

ஆசிரியர்: இரா. செழியன் எம்.ஏ. எம்.பி.

மலர்: 16] சென்னை: ஆனி 25 (8—7—68) திங்கள் ★ வெளியூர்: ஆனி 26 (9—7—68) செவ்வாய் [இதழ்: 20

மதுவிலக்கில் உறுதிகாட்டும் அண்ணா ஆட்சி

ஜைன முனிவரின் பாராட்டு

சென்னை, ஜூலை 7—

"மதுவிலக்குத் திட்டம், பல மாநிலங்களில் அமுல் நடத்தப்படவில்லை; சில மாநிலங்களில், முழு அளவு மதுவுக்குத் தடையில்லை; சில மாநிலங்களில், ஓரளவுக்குத்தான் மதுவிலக்குத் திட்டம் அமுலாக்கப்படுகிறது.

"ஆனால் தமிழகத்தில் முழு அளவில் மதுவிலக்குத் திட்டம்

(4-ம் பக்கம் பார்க்க)

பெரிய மனிதரின் அற்பத்தனமான குற்றச்சாட்டு!

காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பாவுக்கு அமைச்சர் மு. கருணாநிதி தரும் பதில்

சென்னை, ஜூலை 8—

சென்னை வந்துள்ள அனைத்திந்திய காங்கிரசுக் கட்சித் தலைவர் திரு. நிஜலிங்கப்பா, திராவிட முன்னேற்றக் கழக ஆட்சியைத் தாக்கவேண்டும் என்பதற்காகவே தமது தகுதிக்கும்—தரத்துக்கும் குறைந்த முறையில் அற்பத்தனமான குற்றச்சாட்டுக்களைக்கூறி, முன்னுக்குப் பின் முரணாகப்பேசியிருப்பதை பொதுப் பணித்துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள், நேற்று சைதையில் நடந்த பொதுக்கூட்டத்தில் பேசுகையில் எடுத்துக்காட்டிக் கண்டித்தார்.

'பெரிய மனிதர்' என்ற மதிப்புக்குரியவரான திரு. நிஜலிங்கப்பா, தரங்குறைந்த வாதங்களையும், பொருந்தாக் குற்றச்சாட்டுக்களையும் எடுத்துரைத்து தமிழகக் காங்கிரசாரின் பாணியிலே பேசியிருப்பது கண்டு அமைச்சர் கருணாநிதி வியப்புத் தெரிவித்தார்.

தென்காசி வெற்றியைக் கொண்டாடும்வகையில் சென்னை 100-வது வட்ட தி. மு. க. சார்பில் ஏற்பாடு செய்யப்பட்டிருந்த இந்தக் கூட்டம் சைதாப்பேட்டை காரணீசுவரர் கோயில் எதிரில் நடைபெற்றது.

தோழர் சந்தானம் தலைமை வகித்தார்.

தோழர்கள் துரை முருகன், சைதை சம்பந்தம், ஆர். டி. பாஸ்கரன், எம். கோபால் எம்.எல்.ஏ. பெங்களூர் எஸ். வி. பதி, இரா ஜா முகம்மது, சிவகங்கை சேதுராசன், எம். குமார் ஆகியோர், தென்காசியில் தி. மு. க. பெற்ற மாபெரும் வெற்றியையும்,காங்கிரசார் தென்காசியில் நடந்துகொண்ட விதத்தையும் விளக்கிப் பேசினர்.

இறுதியாகப் பேசிய அமைச்சர் கருணாநிதி அவர்களுக்கு ஏராளமான மலர்மாலைகளும், கைத்தறியாடைகளும் அணிவிக்கப்பட்டன.

பல்லாயிரக்கணக்கானவர்கள் கூடியிருந்து அமைச்சரின் பேச்சை ஆர்வத்துடன் கேட்டனர்.

கூட்டம் துவங்குவதற்முன் வாண வேடிக்கையும் நடைபெற்றது.

அமைச்சர் கருணாநிதி அவர்கள் திரு. நிஜலிங்கப்பாவின் குற்றச்சாட்டுக்குப் பதிலளிக்கும் வகையில் பேசியதாவது:—

தோல்வி ஏற்படுத்திய ஆத்திரத்தால் காங்கிரசுக்காரர்கள் ஏதேதோ பேசுகிறார்கள். இப்போது சென்னை வந்துள்ள நிஜலிங்கப்பாவும் பேசியிருக்கிறார்.

நிஜலிங்கப்பா பெரிய மனிதர்; 'உருவத்தால் மட்டுமல்ல--உள்ளத்தாலும் பெரிய மனிதர்' என்று நினைத்திருந்தேன்; ஆனால், 'அது சரியல்ல' என்று கூறுவதுபோல் அவர் பேச்சு அமைந்திருக்கிறது!

நிஜலிங்கப்பா அவர்கள் மாதர் காங்கிரசுக் கூட்டத்தில் பேசிய போது, 'தமிழ்நாட்டுப் பெண்கள் எல்லாம் துரோபதிகளாக மாறவேண்டும்' என்று கூறியிருக்கிறார்.

'ஒருவனையே மணம் புரிந்து வாழ்ந்த கற்புக்கரசி கண்ணகியாக வாழவேண்டும்; கோப்பெருந்தேவியாக வாழவேண்டும்' என்று வாழ்த்தப்பட்ட தமிழகத்தில், தமிழ்நாட்டுப் பெண்களைப் பார்த்து, 'துரோபதைகளாக மாறவேண்டும்' என்று நிஜலிங்கப்பா கூறுகிறார்!

'பாரதக் கதை பற்றியும், துரோபதியின் மண வாழ்க்கை பற்றியும் அறியாமல் நிஜலிங்கப்பா பேசுகிறார்' என்று நினைத்து, தமிழ்நாட்டுப் பெண்கள் அவரை மன்னிக்கவேண்டும் என்று கேட்டுக்கொள்கிறேன்.

'தமிழ்நாட்டுப் பெண்கள் துரோபதைகளாக மாற வேண்டும்' என்று கூறும் நிஜலிங்கப்பாவிற்கு கூறிக்கொள்வோம்—

"அது தமிழர் நாகரிகமல்ல! தமிழரின் பண்பல்ல! தமிழரின் கலாச்சாரமல்ல! கற்புக்கரசி கண்ணகி வாழ்ந்த நாட்டில் அது செல்லாது"

என்று!

'தி. மு. கழக ஆட்சியில், சென்னை போன்ற நகரங்களில்கூட பெண்கள் நடமாட முடியவில்லை' என்று நிஜலிங்கப்பா பேசியிருக்கிறார்! ஆனால், அவர் பேசிய இடம் மாதர் காங்கிரசுக் கூட்டம்!

அந்தக் கூட்டத்திற்கு வந்த பெண்கள் தெருவில் நடமாடி வந்தார்களா? அல்லது பறந்து வந்தார்களா?—பதில் சொல்லட்டும் நிஜலிங்கப்பா!

அவர் பேசிய பேச்சில் ஒரு வாசகத்திலேயே முரண்பட்ட இரு கருத்துக்களைக் காண்கிறோம்.

"சென்னை போன்ற இடங்களில்கூட பெண்கள் பாதுகாப்பாக நடமாட முடியவில்லை என்ற நிலை கண்டு பெரிதும் வருந்துகிறேன்."

இப்படிப் பேசிய அதே நிஜலிங்கப்பா, அடுத்துக் கூறுகிறார்—

"நான் கடந்த நான்கு நாட்களாக கலந்துகொண்ட நிகழ்ச்சிகளில் அனைத்திலும் பெண்கள் பெரும் அளவில் பங்குகொண்டனர்."

'பெண்கள் நடமாட முடியவில்லை' என்று கூறிய அதே தலைவர், 'பெண்கள், நிகழ்ச்சிகளில் பெரும். பங்கு கொண்டனர்' என்று கூறுகிறார்.

முரண்பாடே! உனக்குப் பெயர் தான் காங்கிரசுத் தலைமையா?

இத்தகைய முரண்பாட்டுப் பேச்சு அவருக்கு எப்படி வந்தது?—சேருவார் தோஷம்போலும்!

ஒருவேளை, சுப்பிரமணியம் கை குலுக்கியதால் ஏற்பட்ட பலனோ—அல்லது டி. டி. கே.-யைப் பார்த்த புண்ணியமோ--அல்லது காமராசரைக் கண்ட நற்பயனோ என்னவோ—முரண்பாட்டுப் பேச்சில் அவரும் ஈடுபட்டிருக்கிறார்!

நிஜலிங்கப்பாவிற்கு நினைவுபடுத்துகிறோம்—உலகத் தமிழ் மாநாடு சென்னையில் ஒரு நாள் அல்ல -- இரு நாள் அல்ல -- 10 நாள் நடைபெற்றது. காஞ்சிபுரம் சேலையுடுத்தி--முல்லைமலர் சூடி--வண்ணப் பறவைகளென மலைச் சாலையில் ஊர்வலம் வந்தார்களே -- என்ன நடந்தது அவர்களுக்கு? ஓர் ஊனம் உண்டா? ஒரு மரியாதைக் குறைவான சொல் உண்டா?

அண்ணா நகரில் உலகப் பொருட்காட்சி 70 நாட்கள் நடைபெற்றனவே—எந்தப் பெண்ணுக்கு எந்த ஆபத்து ஏற்பட்டது?

கும்பகோணத்தில் 15 இலட்சம் மக்கள் மகாமகத்திற்குக் கூடினரே -- ஓர் அசம்பாவிதம் உண்டா?

இப்போது நாங்கள் திருப்பிக் கேட்கிறோம் — புதுடில்லியில் போலீசு நிலையம் எதிரிலேயே குடித்துவிட்டு அயல்நாட்டுத் தூதுவர் ஒருவரின் காரை நிறுத்தி -- அவரையும், அவரது மனைவியையும் கீழிறக்கி அவ

(4-ம் பக்கம் பார்க்க)

பயர்மென்கள் போராட்டம்-- இரயில்வே அமைச்சர் சங்கடம்

தென் மாநில முதலமைச்சர்கட்கு வேண்டுகோள்

புதுடில்லி, ஜூலை 8—

தென் பகுதி இரயில்வேயிலும் தென் மத்திய இரயில்வேயிலும் பயர்மென்கள் வேலை நிறுத்தம் செய்ததன் விளைவாக நிலைமை மிகவும் மோசமடைந்துள்ளது. பெரும்பாலும் எல்லா கூட்ஸ் வண்டிகளும் ரத்து செய்யப்பட்டுவிட்டன. மெயில் வண்டிகளும், விரைவு (எக்ஸ்பிரஸ்) வண்டிகளும், டீசல் என்சின்களைக் கொண்டு ஓட்டப்படுகின்றன.

இரயில்வே அமைச்சர் திரு. பூனச்சா, இதனால் மிகவும் மனவேதனையடைந்திருக்கிறார். தென் மாநிலங்களின் (தமிழகம், ஆந்திரம், கேரளம், மைசூர்) முதலமைச்சர்களுடன் தொலைபேசி மூலம் தொடர்புகொண்டு நிலைமையைச் சமாளிக்கத் தமக்கு ஒத்துழைப்பு அளிக்குமாறு கேட்டுக்கொண்டார்.

தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்களும், ஆந்திர முதலமைச்சர் திரு. பிரம்மானந்த ரெட்டியும், நிலைமையைச் சமாளிக்க எல்லாவித உதவிகளும் செய்வதாக உறுதியளித்துள்ளனர்.

வேலை நிறுத்தத்தின் விளைவாக வன்முறைச் செயல் எதுவும் நடைபெறவில்லை என்றாலும், வேலைக்கு வரும் தொழிலாளர்கள் அச்சுறுத்தப்படுவதாகவும், தடுத்து நிறுத்தப்படுவதாகத் தெரிகிறது.

போலீசின் உறுதியான நடவடிக்கைமூலம் அச்சுறுத்தல்கள் தடுக்கப்படும் என்று கூறப்படுகிறது.

இந்த மூன்று இரயில்களும் டீசல் எஞ்சின் உதவிகொண்டு ஓட்டப்படும்.

பயணிகளின் வசதியை முன்னிட்டு, ஐதராபாத் எக்ஸ்பிரஸ், பிட்ரகுண்டாவரை எல்லா இரயில் நிலையங்களிலும் நிறுத்தப்படும்.

சென்னையிலிருந்து வண்டிகள் ரத்து

இன்று (ஜூலை 8) முதல் வடகிழக்குப பிரிவில சென்னை-விஜயவாடா மார்க்கத்தில் கிராண்ட் டிரங்க் எக்ஸ்பிரஸ், ஹௌரா மெயில், சென்னை—ஐதராபாத் எக்ஸ்பிரஸ்—ஆகியவை தவிர மற்ற எல்லா இரயில்களும் ரத்து செய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

சிறந்த தத்துவங்கள் இருந்து பயன் என்ன?

சென்னை, ஜூலை 7—

"இஸ்லாம் மதமாக இருந்தாலும் சரி—கிறித்துவ மதமாக இருந்தாலும் சரி—ஜைன மதமாக இருந்தாலும் சரி—பௌத்த மதமாக இருந்தாலும் சரி-மதத்தின் சிறப்பை எவரும் சந்தேகித்ததில்லை.

"ஒவ்வொரு சமயத்திலும் சிறந்த கோட்பாடுகள் உள்ளன. தத்துவங்கள் போதுமான அளவு உள்ளன; ஆனால், அவற்றினைப் பின்பற்றும் திறமையில்தான் பற்றுக்குறை நிலவுகிறது.

"இன்றையப் போட்டி உலகில் மனிதனுக்கு மனிதன்—நாட்டுக்கு நாடு—தூற்றுதல் நிலவுகிறது! ஒரு நாடு மற்றொரு நாட்டை அடிமைப்படுத்த முயலுகிறது! இத்தகைய நிலையில் வெறும் தத்துவ விளக்கம் மட்டும் போதாது!

"உண்மை என்பது தெளிவானது; ஆனால் அதனைப் பின்பற்றுவது கடினம். 'உன்னைப்போன்று உன் அண்டை வீட்டுக்காரனையும் நேசி' என்று கிறித்துவ மதம் போதிக்கிறது. ஆனால் உலகில் எத்தனைப் பேர் இதனைப் பின்பற்ற முடிகிறது?

"பொருளாதாரத் துறையில் நன்கு முன்னேறியவர்கள் இக்கொள்கையைக் கடைபிடித்திருந்தால் உலகில் பல போர்களைத் தவிர்த்திருக்க முடியும்!

"தத்துவங்களுக்கோ அன்றி அற நூல்களுக்கோ பஞ்சமில்லை; அவற்றைப் பின்பற்றுவோர்தான் போதுமான எண்ணிக்கையில் இல்லை!"

--அறிஞர் அண்ணா

(அனவிரத இயக்கத் தலைவர் வரவேற்பில்)

ஜைன ஆகமங்களில் திராவிடம்

சென்னை, ஜூலை 7—

"தமிழ் நாட்டிற்கு வந்ததிலிருந்து — தமிழர்களின் அன்பு கண்டு என் உள்ளம் பெருமிதமடைகிறது!

"தமிழ்மொழி மிகப் பண்டைய மொழி; ஜைன ஆகமங்களில், 'திராவிட' என்ற சொல்லும், 'தமிழ் லிபி' என்ற சொல்லும் இடம்பெற்றுள்ளன. 'தமிழ்மொழி, மிகமிகப் பழமையான மொழி' என்பதை உணருகிறேன்."

--- ஆசாரிய துளசி

(அனவிரத இயக்கத் தலைவர்)

நிஜலிங்கப்பாவின் நிஜமில்லாபேச்சு!

சென்னை, ஜூலை 7—

"'பெண்களுக்குத் தி. மு. கழக ஆட்சியில் பாதுகாப்பு இல்லை' என்று இப்போது காங்கிரசுத் தலைவர்கள் பேசுகிறார்கள்!

"தென்காசித் தேர்தலின் போதும் அவர்கள் அப்படிப் பேசினர்; தென்காசித் தொகுதியில் பெண் வாக்காளர்கள் அதிகம்; அவர்கள், காங்கிரசாரின் இந்தப் பேச்சைக் கேட்டு வெளியே வந்து பார்த்தார்கள்; தங்களுக்கு நல்ல பாதுகாப்பு இருந்ததைக் கண்டார்கள்!

"தி. மு. கழகத்துக்குப் பெண்கள் ஏராளமாக வாக்குகளை அளித்து, 'எங்களுக்குப் பாதுகாப்பு இல்லை என்பது பொய்; அது நிஜலிங்கப்பாவே சொன்னாலும் அவர் நிஜலிங்கப்பா அல்ல --- பொய் லிங்கப்பா' என்று தீர்ப்பளித்து விட்டனர்!"

---அமைச்சர் மு. கருணாநிதி

(சைதைக் கூட்டத்தில்)

நம் நாடு
இரா. செழியன்

திருவள்ளுவராண்டு 1999 ஆனி 25 (8—7—68) திங்கள்

தென்காசித் தீர்ப்பும் சுப்பிரமணியமும்

தென்காசி இடைத் தேர்தலை, அனைத்திந்திய முக்கியத்துவம் வாய்ந்ததாக உருவாக்கியது தமிழகக் காங்கிரசுத் தலைமையே ஆகும். இதில், கழகத் தலைமைக்குச் சிறிதளவு பங்கும் கிடையாது.

ஓர் அரசியல் பலப் பரீட்சையாகவே தென்காசி இடைத் தேர்தலை, தமிழகக் காங்கிரசுத் தலைமை முடிவுகட்டி, தேர்தல் பிரசாரத்தில் தீவிரமாக ஈடுபட்டது. காங்கிரசுக் கட்சியின் இந்த அறைகூவலை, கழகத் தலைமையும், வேறு வழியில்லாமல் ஏற்றுக்கொள்ள வேண்டிய கட்டாயத்துக்கு ஆளாகியது.

கழகத் தலைமையின்மீதும், கழக ஆட்சியின்மீதும், இந்த இடைத் தேர்தலைப் புகலாகக்கொண்டு காமராசரும், சுப்பிரமணியமும், கற்பனைக் குற்றச்சாட்டுக்கள் பலவற்றை, ஆத்திரமூட்டத்தக்க இழிசொற்களால சுமத்தினர். இரண்டு தலைவர்களும எதிர்பார்த்தபடி, ஆததிரத்துக்குத் துளியும் இடங்கராமல் – தம் வழக்கப்படிக் கண்ணியமாகப் பிரசாரம செய்து – தனது வேட்பாளருக்குக் கழகத் தலைமை, வாக்காளர்களிடை ஆதரவைத திரட்டி வந்தது.

இந்த இடைத் தேர்தல் முடிவு, காங்கிரசுக் கட்சிக்குப் பெருந் தோல்வியாக முடிந்துவிட்டதைக் கண்டதும், ‘சீ, சீ! இந்தப் பழம் புளிக்கும்!’ எனக் கூறிய நரியைப்போல், தமிழ்நாடு காங்கிரசுத் தலைவர், இப்பொழுது இந்த இடைத் தேர்தலைக் குறைந்துப் பேசத துணிந்திருக்கின்றார். தோல்வி பெற்றதற்குப் பின்னர் ஏற்பட்டிருக்கின்ற இந்த ஞானோதயம், தேர்தலுக்கு முன்பே அவருககு ஏற்பட்டிருக்க வேண்டும்.

தமிழ்நாடு காங்கிரசுத் தலைவரான சுப்பிரமணியம் அவர்கள், தேர்தல் முடிவைக் கண்ணியமாக ஒப்புக்கொள்ளுவதற்குப் பதிலாக, தேர்தலில் ஏதோ ஒழுங்கீனம நடைபெற்றிருப்பதாகவும், பொதுவாக ஒரு குழுவைக் கொண்டும் – குறிப்பாக மத்திய இரகசியப் போலீசு நிறுவனம் இது குறிதது விசாரணை நடத்த ஏற்பாடு செய்யலாம் என்றும் கருத்தறிவிததிருக்கின்றார். அவர் கூறியிருக்கின்ற இக்கருத்துப் பற்றி, இதற்கு முன்னரே நாம் குறிப்பிட்டிருக்கின்றோம்.

தமிழகச் சட்டப் பேரவைக்குத் திருப்பெரும்புதூர் தொகுதியில் 1957-ம் ஆண்டும், 1962-ம் ஆண்டும் நடைபெற்றிருக்கின்ற இரண்டு பொதுத்தேர்தல்களிலும், கழக வேட்பாளரைத் தோற்கடித்து முன்னாள் முதலமைச்சரான பக்தவத்சலனார் வெற்றி பெற்றிருக்கின்றார். அந்த இரு தேர்தல்களிலும், தமது வெற்றிக்காகக் காவல்துறை அதிகாரிகளையும், மற்ற அரசாங்க அதிகாரிகளையும் எந்தெந்த வகையில் வெளிப்படையாகப் பக்தவத்சலனார் பயன்படுத்தியுள்ளார் என்ற உண்மையை, சுப்பிரமணியம் அறியாதிருக்க நியாயமில்லை. இதுபோன்றே 1967-ம் ஆண்டு பொதுத் தேர்தலில், அதே தொகுதியில் மண்ணைக் கவ்விய நேரத்தில்கூட பக்தவத்சலனார் அவர்கள், தம்மிடமிருந்த அதிகாரத்தைப் பயன்படுத்தத் தவறவில்லை என்ற உண்மையும், சுப்பிரமணிம் அவர்களுக்குத் தெளிவாகத் தெரியும்.

இதுபோன்றே, காஞ்சிபுரம் தொகுதியில் 1962-ம் ஆண்டு நடைபெற்ற பொதுத் தேர்தலில் அறிஞர் அண்ணா அவர்களைத் தோற்கடிக்க, அரசாங்க இயந்திரம் முழு அளவில பயன்படுத்தப்பட்டிருப்பதை, சுப்பிரமணியம் அவர்கள் அறியாரா? அதுபற்றிய முழுத் தகவலையும் தெளிவாகத் தெரிந்துகொள்ள சுப்பிரமணியம் அவர்கள் விருமபும்பட்சத்தில், அப்பொழுது ‘கனம்’ ஆக இருந்த காமராசர் அவர்களையும், எதோப்பிய நாட்டிற்கு இந்திய அரசின் தூதுவராகச் சென்றிருக்கின்ற அரியலூர் புழ் அழகேசனார் அவர்களையும் கேட்டுத் தெரிந்துகொள்ளட்டும்!

தென்காசி இடைத் தேர்தல் முடிவு காங்கிரசுக் கட்சிக்கு விரோதமாக அமைந்துவிட்டதைக் கண்டதும், ‘அற்புதங்கள் நிகழ்ந்து மீண்டும் ஆட்சி மாறுமா என்று காங்கிரசுக் கட்சியினர் எதிர்பார்க்கக் கூடாது’ என்ற அறிவுரையை, மற்ற காங்கிரசுக் கட்சியினருக்கு உபதேசித்திருக்கின்றார். அந்த அறிவுரையை முதற்கண் தாமே பின்பற்றி, இனியாவது செயல்பட சுப்பிரமணியம் அவர்கள் தீர்மானித்துக்கொள்ள வேண்டும்.

தென்காசி இடைத் தேர்தல் முடிவில், சுப்பிரமணியம் அவர்கள் ஆராய்ந்து அறிந்துகொள்ள வேண்டிய அரிய படிப்பினை அடங்கியிருக்கிறது. பொதுத் தேர்தலின்பொழுது, காங்கிரசுக் கட்சி 34,561 வாக்குகளைப் பெற்றிருக்கிறது. இந்த இடைத் தேர்தலில், அதே அளவு வாக்குகளைப் பெறுவதற்குக் காங்கிரசுக கட்சி தவறிவிட்டிருக்கிறது.

இந்த இடைத்தேர்தலில் 23,876 வாக்குகளை மட்டுமே காங்கிரசுக் கட்சி பெற்றிருக்கிறது. பொதுத் தேர்தலின்போது பெற்றிருப்பதற்கும், இந்த இடைத்தேர்தலில் பெற்றிருப்பதற்கும் உள்ள வித்தியாசம் 10,685 வாக்குகளாகும்.

இதே நேரத்தில், பொதுத் தேர்தலின்போது 33,818 வாக்குகளைப் பெற்றிருப்பதற்கு மாறாக, இந்த இடைத்தேர்தலில் அதே கழக வேட்பாளர் 13,314 வாக்குகளைக் கூடுதலாகப் பெற்றிருக்கின்றார். அதாவது மொத்தத்தில் 47,132 வாக்குகளைக் கழகம் பெற்றிருக்கிறது.

பொதுத் தேர்தலில் பெற்றிருப்பதைவிட இந்த இடைத் தேர்தலில் பதின்மூன்றாயிரம் வாக்குகளை -- சுப்பிரமணியம் கூறுப்படி -- அதிகாரத்தைப் பயன்படுத்தியே கழகம் கூடுதலாகப் பெற்றிருக்கிறது என வாதத்திற்காக ஒப்புக்கொண்டாலும், பொதுத் தேர்தலில் பெற்றுள்ள வாக்குகளைக் காங்கிரசுக் கட்சி பெறத் தவறியிருப்பதற்கு அதே காரணம் பொருந்தாது. பொதுத் தேர்தலில் பெற்றிருந்ததைவிட, இந்த இடைத்தேர்தலில் பத்தாயிரம் வாக்குகள் குறைவாகக் காங்கிரசுக் கட்சி பெற்றிருப்பதன் உள்ளடக்கத்தை சுப்பிரமணியம் அவர்கள் உள்ளது உள்ளவாறு உணர்ந்துகொள்ள வேண்டும்.

பொதுத் தேர்தலுக்கும்—இந்த இடைத்தேர்தல் நடைபெற்றதற்கும் இடையே இருக்கக்கூடிய இப்பதினைந்து திங்களில் தென்காசித் தொகுதியில் காங்கிரசுக் கட்சியின் செல்வாக்கு வேகமாகச் சரிந்துவிட்டிருப்பதையே—பொதுத் தேர்தல் பெற்றுள்ளதைவிடப் பத்தாயிரம் வாக்குகள் குறைவாகக் காங்கிரசுக் கட்சி பெற்றிருப்பது—கோடிட்டுக் காட்டியிருக்கிறது. கழகம் பெற்றிருக்கின்ற இந்த இடைத் தேர்தல் வெற்றிக்கு மாசு கற்பிப்பதை மறந்து, அத்தொகுதியில் காங்கிரசுக் கட்சிக்கு ஏற்பட்டிருக்கின்ற வீழ்ச்சியை மீண்டும் சரிகட்ட சுப்பிரமணியம் அவர்கள், ‘காங்கிரசுக் கட்சியின் தலைவர்’ என்ற முறையில் முனைவாராக!

காங்கிரசுக் கட்சி பெற்றுள்ள வாக்குகளைவிட இரண்டு மடங்கு வாக்குகளைக் கழகம் பெற்றிருந்தும்கூட, அம்மாபெரும் வெற்றியைக் கண்டு கழகம் துள்ளிக் குதிக்கத் துணியவில்லை. எப்பொழுதும்போலவே கழகத்தவர்கள், கண்ணியமாகச் செயல்பட்டு வருகின்றனர்.

இம்மாபெரும் வெற்றியைக் குறித்துக் கழகத் தலைவரும் முதலமைச்சருமான அறிஞர் அண்ணா அவர்கள் எப்படி உணர்ந்திருக்கின்றார் என்பதை சுப்பிரமணியம் அவர்களும், மற்ற காங்கிரசுக் கட்சியினரும் தெரிந்துகொள்ள வேண்டும்.

“தென்காசித் தேர்தல் தந்த தீர்ப்பு, பொதுமக்கள், ‘தி. மு. கழகத்தை ஆதரிக்கிறார்கள்’ என்பதைத் தெளிவாகக் காட்டுகிறது”

என்றும்,

“உடல்நிலை சற்று சுகவீனமாக இருப்பதால், தென்காசித தேர்தல் வெற்றியை முழுமையாக அனுபவிக்க முடியாமல் இருக்கிறேன்”

என்றும் குறிப்பிட்டிருக்கின்றார்.

ஆனால், இந்த இடைத் தேர்தலில் காங்கிரசுக் கட்சி வெற்றி பெற்றிருககும்பட்சததில், சுப்பிரமணியம் அவர்கள் முதற்கொண்டு முச்சந்தியில் நின்று தொடை தட்டிக்கொண்டிருக்கின்ற காங்கிரசு மீசைமுறுக்கிகள் வரையில், வெறிகொண்டல்லவா தலைவிரிகோலமாக ‘வெற்றி’ முழக்கம் செய்துகொண்டிருப்பர்? ‘வெற்றிக் கூட்டம்’ நடத்துவது என்ற போர்வையில், அமைதியும் ஒழுங்கும் கெடுவதற்குரிய கயமைச் செயல்கள் அனைத்திலும் அல்லவா அவர்கள் ஈடுபட்டிருப்பர்?

அனைத்துக்கும் மேலாக, ‘கழக ஆட்சியே! பதவியைவிட்டு வெளியேறு!’ என்ற முழக்கத்தையும் அல்லவா, இந்தக் காங்கிரசு வெறியர்கள் கொக்கரித்துக்கொண்டிருப்பர்?

இடைத் தேர்தலில், தோல்வி—மகத்தான தோல்வி ஏற்பட்டுவிட்டதனாலல்லவா, ‘குந்தினயா குரங்கே -- சந்தடி அடங்க’ எனக் கொள்ளத்தக்க நிலையில், வாயாட்டமும் அடங்கி வாலாட்டமும் குறைந்து—மூலையில் முக்காடு போட்டுக்கொண்டு—தங்களுக்குத் தாங்களே ஆறுதல் கூறிக்கொண்டு—இருக்குமிடம் தெரியாமல் காலங்கழித்துக்கொண்டிருக்கின்றனர், காங்கிரசுக் கட்சியினர்?

—கா. க.

வரலாற்றுப் பெருமைமிகு காஞ்சியில் சரித்திரச் சிறப்புமிக்க நினைவு விழா!

செங்கற்பட்டு மாவட்டத் தலைமையகம் மாற்றம்-- பல்லாயிரவர் பங்கேற்ற நிகழ்ச்சி விவரம்

புதிய பொறுப்புக்களை ஏற்க அரசு அலுவலர்களுக்கு முதலமைச்சர் அண்ணா அன்பழைப்பு

காஞ்சிபுரம், ஜூலை 8 —

“காஞ்சி மாநகர், இனி வேகமாகத் தொழில் வளர்ச்சியும், வாணிப வளர்ச்சியும் பெறவிருக்கிறது; புதிய பொறுப்புகளுக்கு ஏற்ப அரசு அலுவலர்கள் பணியாற்ற வேண்டும்.

“காஞ்சிக்குத் தென்மேற்கே ஓடும் வேகவதி ஆற்றுத் திட்டம், ஏற்கனவே திட்டமிடப்பட்டது; ஆனால், என்ன காரணத்தினாலோ அது நிறைவேற்றப்படவில்லை; எனவே அரசு அதிகாரிகள் இத்திட்டத்தைச் செயல்படுத்த முயற்சிகளை மேற்கொள்ளவேண்டும்”

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், ஜூலை 6-ம் நாளன்று நடைபெற்ற காஞ்சிபுரம் தலைநகரத் துவக்க விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கேட்டுக்கொண்டார்.

நினைவுக் குறிப்பு

செங்கற்பட்டு மாவட்டத் தலைமையக அலுவலகங்கள் பிரிட்டிஷ் ஆட்சிக் காலந்தொட்டு கடந்த இரு நூற்றாண்டுகளாக சென்னை நகரை ஒட்டியே இருந்து வந்தன.

இந்தத் திங்கள் முதலாம் நாளிலிருந்து இவை காஞ்சிக்கு மாற்றப்பட்டுச் செயல்படத் தொடங்கியிருக்கின்றன.

ரூ 17 இலட்சம் செலவில் தலைமையகக் கட்டிடங்கள் கட்டுவதற்குத் திட்டமிடப்பட்டுள்ளன.

அரசு ஊழியர்களுக்கு ரூ. 20 இலட்சம் செலவில் வீடுகள் கட்டுவதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது.

இவைகளுக்கான அடிக்கல் நாட்டு விழாவும், வேகவதி நதிக்கரையில் அமைக்கப்பட்ட அலங்காரப் பந்தலில் நடைபெற்றது; புதிய கட்டிடங்கள் இந்தப் பகுதியில்தான் கட்டப்படவிருக்கின்றன.

தற்போது இதே பகுதியில், கூட்டுறவுப் பயிற்சிப் பள்ளிக் கட்டிடத்தில்தான் தலைமை அலுவலகங்கள், தற்காலிகமாகச் செயல்பட்டு வருகின்றன.

விழாக்கோலம்

தலைநகர் மாற்ற விழாவையொட்டி காஞ்சி நகரமே விழாக் கோலம் கொண்டிருந்தது.

வீதிகள்தோறும் தோரணங்கள் கட்டப்பட்டிருந்தன; முக்கிய இடங்களில் அலங்கார வளைவுகள் அமைக்கப்பட்டிருந்தன.

எங்கு நோக்கினும், கொடிகளும் தோரணங்களுமாகக் காட்சியளித்தன.

தலைநகர் மாற்றத்தை வரவேற்றும் வாழ்த்தியும் தனிப்பட்ட நிறுவனங்கள்—வணிக சங்கங்கள் வளைவுகள் அமைத்திருந்தன.

விழாவினையொட்டி வாண வேடிக்கைகளும் நடைபெற்றன.

இவ்விழாவையொட்டி மாவட்ட இரண்டாவது கிராம நலக் கண்காட்சியை முதலமைச்சர் அண்ணா அவர்கள் திறந்துவைத்தார். இக்கண்காட்சி ஆறு நாட்களுக்கு நடைபெறும்.

விழா நடைபெறும் இடத்திற்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் வந்ததும், இரண்டு யானைகள் அவருக்கு மாலைகள் சூட்டின.

மாவட்டத் தனிப் போலீசுப் படையின் அணிவகுப்பு மரியாதையை முதலமைச்சர் அண்ணா அவர்கள் ஏற்றுக்கொண்டார்.

பள்ளிச் சிறுவர்களின் கலை நிகழ்ச்சிகளும் விழாவில் இடம் பெற்றன.

நிகழ்ச்சிகள்

பழம் பெரும் வரலாற்றுப் பெருமைமிக்க காஞ்சியில் நடைபெற்ற--சரித்திர முக்கியத்துவம் வாய்ந்த இந்த விழாவிற்கு முதலமைச்சர் அண்ணா அவர்கள் தலைமை தாங்கினார்கள்.

மாவட்ட ஆட்சித் தலைவர் இலட்சுமிகாந்தன் அனைவரையும் வரவேற்றுப் பேசுகையில், ‘செங்கற்பட்டு மாவட்டத் தலைநகர், காஞ்சியில் அமையவேண்டும் என்ற காஞ்சி மக்களின் நெடுநாளைய கோரிக்கை, இன்று நிறைவேறியிருக்கிறது’ எனக் குறிப்பிட்டார்.

தற்காலிகமாக இப்பொழுது செயல்பட்டுவரும் அலுவலகக் கட்டிடங்களை, வருவாய்த் துறை அமைச்சர் திரு. கே. ஏ. மதியழகன் அவர்கள் துவக்கிவைத்து, காஞ்சியின் வரலாற்றுப் பெருமையை விளக்கினார்.

அரசு ஊழியர் குடியிருப்பு மனைக்குக் கூட்டுறவுத் துறை அமைச்சர் திரு. செ. மாதவன் அவர்கள் அடிக்கல் நாட்டி, ‘அரசு ஊழியர்கள் அனைவருக்கும் குடியிருப்புக்கள் கட்டித் தரவேண்டும் என்ற கொள்கையை அரசு ஏற்றுக்கொண்டு, அதற்குத் தக்கபடி நடந்துவருகிறது’ எனக் குறிப்பிட்டார்.

புதிய அலுவலகக் கட்டிடங்களுக்கும், காவல் துறையினருக்கான குடியிருப்புக் கட்டிடங்களுக்கும் பொதுப் பணித் துறை அமைச்சர் திரு. மு. கருணாநிதி அவர்கள் அடிக்கல் நாட்டிப் பேசுகையில், ‘உலகெங்கும் உள்ள தமிழர்கள் பெருமையாகப் பேசிக்கொள்ளும் ஊர் காஞ்சி நகரமாகும்’ எனக் குறிப்பிட்டார்.

விழாவில் அமைச்சர்கள் ஏ. கோவிந்தசாமி, சாதிக் பாட்சா, மா. முத்துசாமி, சத்தியவாணி முத்து ஆகியோர் கலந்துகொண்டனர்.

செங்கற்பட்டு மாவட்டத்தைச் சேர்ந்த எம்.பி.-க்கள், எம்.எல்.ஏ.-க்கள், மற்றும் அரசுத் தலைமைச் செயலக உயர் அதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

(4-ம் பக்கம் பார்க்க)

மாயூரம் — மணல்மேட்டில்

இரு மாநாடுகள்

பல்லாயிரவர் வந்து குழுமிடும் வகையில் வசதிகள்

வரவேற்புக் குழுத் தலைவர் தரும் தகவல்

மாயூரம், சூலை 5— மாயூரம் சமுதாயச் சீர்திருத்த—விவசாய மாநாடு இம்மாதம் 12, 13-ம் நாட்களில் நடைபெறவிருக்கிறது.

இதற்கான முன்னேற்பாடுகள் தீவிரமாக நடைபெற்றுக் கொண்டிருக்கின்றன.

இது குறித்த வரவேற்புக் குழுத் தலைவர் என்.கிட்டப்பா எம்.எல்.ஏ. தெரிவிப்பதாவது :—

"மாயூரம் அடுத்த மணல்மேடு இயற்கை எழில் தவழும் சிற்றூர். மாயூரத்திலிருந்து பட்டவாத்தி வழியாக 12 கல் தொலைவு—கிழாய் வழியாக 9 கல் தொலைவும் உள்ளது. சுற்றுப்புறங்களில் ஏராளமான சிறு கிராமங்களால் சூழப்பெற்றது. விவசாயிகள் பிரச்சினையில் முக்கியத்துவம் பெற்ற ஊராகும் இது.

இங்குதான், வரும் 12, 13-ம் நாட்களில் சமுதாயச் சீர்திருத்த மாநாடும், விவசாய மாநாடும், பெரும் மாவட்ட மாநாடுகளின் அளவிலும் தரத்திலும் நடைபெறச் சீரிய பல ஏற்பாடுகள் நடைபெற்றுள்ளன.

பெரும் அளவில் பந்தல் அமைக்கப் பெற்று முடியும் தறுவாயில் உள்ளது.

கல்லால் கட்டப் பெற்ற பெரிய மேடை முடிந்துவிட்டது. குடந்தையிலிருந்து ஒலி—ஒளி அமைப்பாளர்கள் வந்து வேலை தொடங்கிவிட்டனர்.

40"×80" அளவில் அழகுற அச்சிடப்பட்ட இரு வண்ணச் சுவரொட்டிகள் மாவட்டம் முழுவதும் அனுப்பப்பட்டுள்ளன; மேலும், அண்டையிலுள்ள திருச்சி, தென்னாற்காடு மாவட்டங்களுக்கும் சுவரொட்டிகள் அனுப்பிவைக்கப்பட்டுள்ளன.

12—7—68 காலையில் துவங்கவிருக்கும் ஊர்வலத்தை அணி செய்ய தஞ்சையிலுள்ள கிராமிய இசை, நடனக் குழுக்களுக்கு ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

பொய்க்கால் குதிரை, கரகம், காவடி, புலிவேடம், சிலம்பம், தாரை தப்பட்டை, குந்தளம், உறுமி மேளம் முதலிய அலங்காரங்கள் உண்டு.

இரண்டு நாள் மாநாடுகளையும் தமிழக அரசின் செய்திப் பிரிவைச் சார்ந்த திரைப் படத் துறையினர் படம் எடுக்கவும் ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

தொண்டர் படைக்கு ஏராளமான தோழர்கள் விண்ணப்பம் அனுப்பி, சிறந்ததொரு படையும் அமைக்கப்பட்டுவிட்டது.

பற்பல உட்குழுக்களும் அமைக்கப்பட்டு, அலங்காரம்—ஊர்வலம்—உணவு வசதி—தீர்மானங்கள்—நிகழ்ச்சி அமைப்பு ஆகியவற்றைத் தனித் தனியே கவனித்துவருகின்றனர்.

சைக்கிள் வண்டிகளிலும், பேருந்து மற்றும் உந்து வண்டிகளிலும் ஆயிரக்கணக்கானோர் வருவதாகத் தகவல் வந்தவண்ணம் உள்ளதால் அந்த வண்டிகளை நிறுத்திவைக்கவும் மாநாட்டுப் பந்தலுக்கு அருகில் வசதியான இடம் ஒதுக்கப்பட்டுள்ளது.

குடும்பத்தோடு வருபவர்களுக்குத் தங்கவும், படுக்கவும் பந்தலில் வசதி செய்யப்பட்டுள்ளது.

கைதேர்ந்த விருதுநகர் உணவு விடுதியினரால் பந்தலுக்குள் 'ஸ்டால்' அமைக்கப்பெற்று, தேநீர் — சிற்றுண்டி — உணவு முதலிய வசதிகளும் சிறந்த சுவையான முறையில் செய்யப்பட்டுள்ளன.

கழகத்தின் தலைசிறந்த பேச்சாளர்களும், தொழிற்சங்கங்களில் ஈடுபாடு உள்ளவர்களும் தனித்தனி தலைப்புக்களில் சொற்பொழிவு ஆற்றுவார்கள்.

இடைவிடாது இசை நிகழ்ச்சிகளும், பிரச்சாரக் கலை நிகழ்ச்சிகளும், சென்னை முரசொலி மன்றத்தார் நடத்தும் கலைஞர் மு. க. தீட்டிய 'காகிதப் பூ' நாடகமும் இரு நாட்களும் நடைபெறும்.

பந்தலிலும் சுற்றுப்புறங்களிலும் குடிதண்ணீருக்கான குழாய்களும், தொட்டிகளும் தனியே அமைக்கப்பட்டுள்ளன.

மணல்மேடு, மற்றும் அண்மையிலுள்ள ஊராட்சித் தலைவர்கள் நல்ல முறையில் ஒத்துழைப்பு நல்கி ஈடு இணையற்ற மாநாடுகளாக நடைபெற ஆவன செய்வதில் ஆர்வங்காட்டி வருகின்றனர்.

ஆறுகளில் தண்ணீர் வந்து விவசாய வேலைகளைத் துவங்குமுன் தஞ்சை மாவட்ட விவசாயிகள் தெளிவான—உறுதியான கொள்கைகளோடு தங்கள் வேளாண்மை அலுவல்களை கவனிக்க இந்த மாநாடு பெரிதும் உதவும் என இந்தப் பகுதியில் எதிர்பார்க்கின்றனர்.

திருச்சி வானொலி நிலையத்தார் முக்கிய நிகழ்ச்சிகளை ஒலிபரப்பச் செய்வார்கள் எனவும் நம்பப்படுகிறது.

மாநாட்டுக்கு அனுமதிக் கட்டணம் கிடையாது என்பது குறிப்பிடத்தக்கது."

ஆழம் பார்க்கிறது இந்தி ஆதிக்கம்!

தென்னாட்டில் இந்திப் பல்கலைக் கழகமாம்

காங்கிரசுத் தலைவர் வாயால் யோசனை கூற வைத்திருக்கிறது

புதுடில்லி, சூலை 8— "தமிழ்நாடு, ஆந்திரம், கேரளம், மைசூர் ஆகிய தென் மாநிலங்கள் ஒவ்வொன்றிலும் குறைந்த பட்சம் ஓர் இந்திப் பல்கலைக் கழகமாவது அமைக்கப்பட வேண்டும்"

என்று, மத்திய அரசின் கல்வித் துறைத் துணைக் குழு ஒன்று வற்புறுத்தியுள்ளது.

"காங்கிரசுத் தலைவர் நிஜலிங்கப்பா யோசனை கூறியபடி, தென் இந்தியாவில் ஓர் இந்தி மத்திய இந்திப் பல்கலைக் கழகம் நிறுவப்பட வேண்டும்" என்று குழு சிபாரிசு செய்தது.

"இந்தி பேசாத மாநிலங்களில் இந்தியைப் பரப்பப் பொது நிறுவனங்களின் குழு ஒத்துழைப்பை அரசாங்கம் பெற வேண்டும்" என்றும் குழு தெரிவித்தது.

சில்லமரத்துப்பட்டியில் கழகக் கூட்டம்

24—6—68 அன்று சில்லமரத்துப்பட்டி தி. மு. க. கிளையின் சார்பில் நடைபெற்ற கூட்டத்தில் தோழர்கள் கே. எம். எம். மேத்தா எம்.எல்.ஏ., இராசாங்கம் எம். எல். ஏ., பி. பாண்டியன், மு. நெடுமாறன், சுருளிவேல், சீ. நெடுமாறன் ஆகியோர் பேசினர்.

இக்கூட்டத்தில் தென்காசி இடைத்தேர்தல் நிதியாக கே. எம். எம். மேத்தாவிடம் ரூ. 51 அளிக்கப்பட்டது.

தி. மு. க. செல்வாக்கும் புகழும்

மேலும் உயர்ந்தன!

டில்லிக்கு எதிராகவே தென்காசி மக்கள் வாக்களித்தனர்!

'தென்காசி இடைத் தேர்தலில் கிடைத்துள்ள வாக்குகள், 'மத்திய அரசுக்கு எதிராக அளிக்கப்பட்டவை' என்று சில நோக்கர்கள் கருதுகின்றனர்; ஏனெனில், மத்திய அரசில் காங்கிரசு அதிகாரத்திலிருப்பதால், காங்கிரசையும்—மத்திய ஆளும் கட்சியையும் வாக்காளர்கள் ஒன்றாகக் கருதுகின்றனர்.

"தென்காசித் தேர்தல் வெற்றி தி. மு. கழகத்தின் செல்வாக்கையும், புகழையும் மேலும் உயர்த்தவே செய்யும்"

என்று 'மெயில்' ஆங்கில நாளிதழின் புதுடில்லிச் செய்தியாளர் தெரிவித்துள்ளார். தென்காசித் தேர்தல் முடிவு புதுடில்லியில் எத்தகைய எதிரொலிகளை ஏற்படுத்தியிருக்கிறது என்பதை, அந்தச் செய்தியாளர் (திரு. மோகன்ராம்) ஒரு சிறப்புக் கட்டுரை மூலம் விளக்கியிருப்பதாவது :—

'அரியானாவிலும், கிருஷ்ணகிரியிலும் நடந்த இடைத் தேர்தலில் காங்கிரசுக்கு வெற்றி கிடைத்ததை வைத்துக்கொண்டு, 'மக்களின் ஆதரவு காங்கிரசுக்குத் திரும்புகிறது' என்று கருதியவர்கள், 'தென்காசியிலும் அவ்வாறே நடக்கும்' என்று நம்பினர். அத்தகைய காங்கிரசு வட்டாரத்துக்குத் தென்காசியில் தி. மு. க.-வுக்குக் கிடைத்துள்ள வெற்றி, பெரும் வியப்பை அளித்துள்ளது.

அரியானாவிலும், மேற்கு வங்கத்தில் கிருஷ்ணகர் நாடாளுமன்றத் தொகுதியிலும் நடைபெற்ற இடைத் தேர்தலில் காங்கிரசு வெற்றி பெற்றபோதிலும் மத்தியப் பிரதேசத்தில் நடந்த இரண்டு முக்கியமான இடைத் தேர்தல்களில் காங்கிரசு தோற்றுவிட்டது.

தென்காசித் தேர்தல் வெற்றியைத் தி. மு. க.-வும், காங்கிரசும் ஒரு கவுரவப் பிரச்சினையாகக் கருதின.

எனவே, தென்காசியில், எண்ணிப்பார்க்க முடியாத வித்தியாசத்தில் காங்கிரசு தோல்வி கண்டதன்மூலம், 'காங்கிரசின் பக்கம் ஆதரவு திரும்புகிறது' என்ற கூற்று உண்மையல்ல என்பது மெய்ப்பிக்கப்பட்டிருக்கிறது!

பத்திரிகைச் செய்திகளை வைத்துக்கொண்டு பார்த்த வகையில், காங்கிரசுக்கும் வாய்ப்பு இருப்பதாக புதுடில்லியில் ஒரு கருத்து நிலவியது.

தி. மு. க. அரசுமீது நடுத்தர மக்களும், படித்தவர்களும் அதிருப்தியடைந்துள்ளதாகக் கூறப்பட்டபோதிலும், 'தி. மு. க.-வுக்கு மக்களிடம் இருந்த செல்வாக்கு மறையவில்லை' என்பது தெளிவாகிவிட்டது! தி. மு. கழகம், நேரடிப் போட்டியில் தனது பலத்தை நிலைநிறுத்திக்கொண்டுள்ளது.

'தென்காசித் தேர்தலில் தி. மு. க. அரசு அதிகாரிகளைப் பயன்படுத்தியது' என்ற குற்றச்சாட்டை, டில்லி அரசியல் வட்டாரங்கள் பொருட்படுத்தவில்லை.

எனினும், காங்கிரசின் தோல்விக்குக் கிடைத்துள்ள வாக்கு வித்தியாசம், மிக அதிகம். இதற்கு, 'அரசாங்க இயந்திரத்தைப்பயன்படுத்தியதுதான் காரணம்' என்று அவ்வளவு சுலபமாக விளக்கம் சொல்லிவிட முடியாது.

திரு. சி. சுப்பிரமணியமும், திரு. காமராசரும் செய்த தீவிரப் பிரச்சாரத்தையும் மீறிக் காங்கிரசு தோற்றிருப்பதால், 'தமிழகத்தைக் காங்கிரசு நிரந்தரமாக இழந்துவிட்டது' என்றும், 'அது திரும்பி ஆட்சிக்கு வருவதற்கு நியாயமான வாய்ப்புகள் ஏதுமில்லை' என்றும் இங்கு அரசியல் வட்டாரத்தில் கருதப்படுகிறது.

தென்காசித் தேர்தலில் மக்கள் வாக்களித்திருக்கும் முறை, மாநிலத்தில் காங்கிரசு எதிர்ப்பு உணர்ச்சியின் தீவிரத்தைக் காட்டுகிறது! இடைத் தேர்தல்கள் அனைத்திலும் தி. மு. கழகம், தன் இடத்தைக் காப்பாற்றிக்கொண்டதுடன், இப்போது காங்கிரசு வகித்த இடத்தையும் பிடித்துக்கொண்டுவிட்டது!"

'நிசலிங்கப்பா கூற்றில் பசையில்லை'

'தெளிவான தீர்ப்பை வழங்கியது தென்காசி'

'இனியேனும் காங்கிரசு தன்னைத் திருத்திக்கொள்ளுமா?'

தென்காசித் தொகுதி இடைத் தேர்தல் முடிவு குறித்துப் பல்வேறு பத்திரிகைகளும் தங்கள் கருத்துக்களைத் தலையங்க வாயிலாகத் தெரிவித்துள்ளன ; அவற்றில் சில வருமாறு :—

'விடுதலை'

"எப்பாடுபட்டாகிலும் தேர்தல் வெற்றியைப் பெற்றுவிடவேண்டும்; அதுவும் காங்கிரசின் இடம் ஆளும் கட்சிக்குப் போய் விடக்கூடாது என்பதற்காகவே 'வகுப்புவாதத்'தைக் கண்டிக்கும் காங்கிரசு, ஒவ்வொரு சாதியாருக்கும் கூட தனித் தனியே 'துதி' பாடிற்று!

"தென்காசியை மனத்திற்கொண்டே, 'இராசபாளையம் திருவிழா'வையும் நடத்தி, தி. மு. கழக ஆட்சி மீது பாணம் தொடுக்கும் தீர்மானங்களைப் போட்டனர்!

"இந்திய உதவிப் பிரதமர் மொரார்ஜியே அழைத்துவரப்பட்டார்; என்றாலும், மக்கள் தெளிவான தீர்ப்பை வழங்கிவிட்டனர்!

"தி. மு. க. 23,000 வோட்டு வித்தியாசத்தில் வெற்றி வாகை சூடிவிட்டது!

"இனியாவது காங்கிரசுக் கட்சி பாடம் பெற வேண்டும்! பிரசாரத்தைக் கண்ணியத்துடன் நடத்துவதோடு, தரக்குறைவான—உண்மைக்கு மாறான முறையில் செல்லாமல், தன்னைத் திருத்திக்கொள்ளவேண்டும்!

"இத்தோல்வியிலிருந்து பெற வேண்டிய பாடம் காங்கிரசுக்கு ஏராளம்! வெறும் ஒப்பாரியும், வசை புராணமும், இழிபிரசாரமும் அவர்களை ஒரு நாளும் வெற்றிக் களத்திற்கு அழைத்துச் செல்லாது!

"தென்காசியில் தெளிவான தீர்ப்பை வழங்கிய வோட்டர் பெருமக்களை நாம் பாராட்டுகிறோம்; ஒரு முறை அல்ல—பலமுறை!"

'நவமணி'

"காங்கிரசுக்குக் கிடைத்த ஓட்டுகளைப்போல் இருமடங்கு வாக்குகள் கழக அபேட்சகருக்குக் கிடைத்திருக்கிறது. எனவே, எப்படிப் பார்த்தாலும், இது மாபெரும் வெற்றிதான்.

"காங்கிரசுக்கு உள்ள இடம் நட்டம் என்பதுடன், வாக்கு எண்ணிக்கை அடிப்படையில் பார்த்தால் இது மிகப் பெரிய தோல்வி. அதிலும், இதை கவுரவப் பிரச்சினையாக ஆக்கி காங்கிரசுப் பெருந்தலைவர்கள் எல்லாம் நேரடியாகத் தேர்தல் பிரசாரத்தில் ஈடுபட்டனர் என்பதையும் கவனிக்க வேண்டும்.

"'ஒரு சாதாரண இடைத் தேர்தல்தானே? இதற்கு என்ன தனி முக்கியத்துவம்?' என்ற ரீதியில் காங்கிரசுக்காரர்கள் பேசலாம். அகில இந்தியக் காங்கிரசின் தலைவர் நிஜலிங்கப்பா இப்படிப் பேசியிருக்கிறார். நியாயமாகப் பார்த்தால் இப்படிக் கூறுவது சரிதான்; ஆனால், இந்தத் தேர்தலை கவுரவத் தேர்தலாக ஆக்கியதும், இதன் முடிவிலேயே இந்த ராஜ்யத்தின் அரசியல் எதிர்காலமே இருக்கிறது என்ற ரீதியில் பிரசாரம் நடத்தியவர்களும் காங்கிரசுக்காரர்கள்தான்!

"இந்தத் தேர்தல் முடிவு வேறு விதமாக இருந்திருந்தால் காங்கிரசுக்காரர்கள் என்ன கூறியிருப்பார்கள் என்பதையும் கவனிக்க வேண்டும். எனவே, இப்போது, 'தனி ஓர் உப தேர்தல் முடிவுக்கு முக்கியத்துவம் தேவையில்லை' என, நிஜலிங்கப்பா கூறுவதில் பசை இல்லை!

"கட்டுப்பாடாகக் காங்கிரசுத் தேர்தல் பிரசாரம் செய்த பின்னரும்—எத்தனை எத்தனையோ குறைபாடுகள் சுட்டிக்காட்டப்பட்ட பின்னரும் — குற்றச்சாட்டுகள் எடுத்து வீசப்பட்ட பின்னரும்—கழகத்திற்கு இத்தனைப் பெரிய வெற்றியை தென்காசி மக்கள் தந்திருக்கின்றனர் என்றால், அதைக் குறைத்து மதிப்பிட முடியாது.

"பிற மாநிலங்கள் சிலவற்றில், அரசியல் காற்று, காங்கிரசுக்கு ஆதரவாக அடிக்கத் தொடங்குவது போன்ற வகையிலேயே தொடர்ந்து பல தேர்தல் முடிவுகள் இருந்துவருகின்றன.

"தமிழகத்தைப் பொறுத்தவரையில், அது போன்ற நிலை எதுவும் இல்லை என்பதையும், ஆளும் கட்சியான தி. மு. கழகத்திடம் மக்களின் நம்பிக்கை பெருகி வருகிறதே தவிர, குறையவில்லை என்பதையும் தென்காசி குறிப்பிடுகிறது."

எக்ஸ்-ரே டெலிஸ்கோப்

விண்வெளியில் பறக்கிறது!

சூரியனைத் தவிர வேறு கிரகங்களிலிருந்து ஒளிக் கிரணங்கள் கிளம்புகின்றனவா? அவ்வாறாயின், அவற்றின் ஒளிசக்தி என்ன?—என்ற விவரங்களை அறிந்து கொள்வதற்காக மிகவும் சக்தி வாய்ந்த 'எக்ஸ்-ரே டெலிஸ்கோப்' ஒன்றை ராக்கெட்டில் வைத்து விண்வெளியில் செலுத்தியுள்ளனர்.

உலகிலேயே மிகவும் சக்தி வாய்ந்த இந்த டெலிஸ்கோப், பிரிட்டனில் உள்ள லெய்செஸ்டர் பல்கலைக்கழக விஞ்ஞான ஆராய்ச்சிப் பிரிவால் தயாரிக்கப்பட்டது.

தெற்கு ஆஸ்திரேலியாவிலிருந்து செலுத்தப்பட்ட இந்த டெலிஸ்கோப் ராக்கெட், இப்போது 115 மைல்கள் உயரம் வரை சென்று உள்ளது.

வானவியல் மற்றும் விண்வெளி ஆராய்ச்சியில் இது ஒரு முக்கிய சாதனையாகக் கருதப்படுகிறது. இதிலிருந்து கிடைக்கக்கூடிய விவரங்கள் பல ஆராய்ச்சிகளுக்கு அடிப்படையாக அமையக்கூடும்.

பிரிட்டனும், ஐரோப்பிய விண்வெளி ஆராய்ச்சிக் கழகமும் சேர்ந்து இதுவரை இதுபோன்ற 183 ராக்கெட்டுகளைச் செலுத்தியுள்ளது.

வறுமையில் வாடுவோர்

வளமிக்க வாழ்வு பெறுவது அவசியம்

தாமதப் போக்கு சனநாயகத்திற்கு உரியதன்று!

'மக்களுடன் பழகி அவர்தம் குறைகளைக் களைய முனைவீர்'-- அரசு அதிகாரிகளுக்கு முதலமைச்சர் அண்ணா கனிவுரை

காஞ்சிபுரம், சூலை 8—

"மக்களுடன் பழகி -- குறைகளை அறிந்து -- அவற்றைத் தீர்க்கும்வகையில் அரசு அதிகாரிகள் பணியாற்றினால் தான், மாநிலத்தை ஆளுகின்ற அரசுக்குச் சிறப்பு ஏற்படும். கிராம மக்கள் வரும்போது அவர்களை அன்புடன் வரவேற்று -- காரியங்கள் செய்யக்கூடியதாக இருந்தால் வாக்களித்து -- இயலாததாக இருந்தால் இதமாக எடுத்துக் கூறி விளக்கி அனுப்பவேண்டும்.

"தாமத நிலையைத் தவிர்த்திடும்வகையில் அதிகாரிகள் செயல்பட்டால்தான், உண்மையான சனநாயகத்தின் பலனை மக்கள் அனுபவிக்கமுடியும்.

"ஒவ்வொரு அரசு அலுவலகமும், சனநாயகத்தின் பயிற்சிக்கூடமாக ஆகவேண்டும்; அப்போதுதான் சனநாயகம் வளரும்.

"பள்ளிக்கூடங்களில் -- கல்லூரிகளில் -- ஆபிரகாம் லிங்கன், காந்தியடிகள், கென்னடி ஆகியோரின் சனநாயகத்தைப்பற்றி மேற்கோள் காட்டிவிடுவதால் மட்டும் சனநாயகம் வளர்ந்துவிடாது! ஒவ்வொரு அரசுத் துறை அதிகாரியும் சனநாயகத்தை வளர்க்கும் முறையில் பணியாற்றவேண்டும்! சனநாயகத்தை வளர்க்கும் துறையில் அரசு அதிகாரிகள் தங்கள் கடமைகளைச் செவ்வனே ஆற்றவேண்டும்''

என்று முதலமைச்சர் அண்ணா அவர்கள், காஞ்சிபுரம் தலைநகர்த் துவக்க விழாவிற்குத் தலைமை தாங்கிப் பேசுகையில் கேட்டுக் கொண்டார். அவரது உரை வருமாறு :—

அக்கறைக்கு எடுத்துக்காட்டு!

"ஆடவரும் பெண்டிரும், வாலிபர்களும் வயோதிகர்களும், செங்கற்பட்டு மாவட்டத் தலைநகராகக் காஞ்சிபுரம் ஆக்கப்படுகிற இந்த விழாவில் பங்கு கொண்டிருப்பது, இந்த முடிவு எந்த அளவுக்கு மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது என்பதைத தெளிவாக்கியுள்ளது.

'ஒரு அரசு அலுவலகம் எங்கிருந்தால் என்ன--எங்கே மாற்றப்பட்டால் என்ன' என்றில்லாமல் நாட்டு மக்கள் அக்கறை காட்டுவது, 'நீண்ட நாள் விருப்பம் நிறைவேறுகிறது' என்பதற்கு அரியதோர் எடுத்துக்காட்டு!

ஒத்துழைப்பைப் பெற்றோம்!

சொந்தக் கட்டிடத்தில் தலைமையகம் இன்று இல்லாமலிருந்தாலும், பொதுப் பணி அமைச்சரும், வருவாய்த்துறை அமைச்சரும், கூட்டுறவுத் துறை அமைச்சரும் கட்டிடக் கால்கோள் விழாக்களை நடத்தி, 'சொந்தக் கட்டிடம் எழும்' என்ற உறுதியை அளித்திருக்கிறார்கள்.

அலுவலக மாளிகை—எழில்மிக்க கட்டிடங்கள்—அலுவலர் குடியிருப்புகள் எழ இருக்கின்றன.

காஞ்சி தலைநகர் ஆவதற்கு எல்லாவிதத்திலும் தகுதிவாய்ந்தது என்பதை வரலாற்றுச் சான்றுகளுடன் அமைச்சர்கள் கருணாநிதியும், மதியழகனும் எடுத்துக் கூறினர்.

இப்படி காஞ்சிபுரம் தலைநகர் ஆக்கப்படுவதை எந்தக் கட்சியும் எதிர்க்கவில்லை; எல்லாக் கட்சித் தலைவர்களின் ஒத்துழைப்பையும் பெற்றுத்தான், அரசு இந்தக் காரியத்தைச் செய்திருக்கிறது.

இன்றைய அரசின் கடமை அது

முன்பு ஆட்சியில் இருந்தவர்கள் செய்ய நினைத்த நல்ல காரியங்களை நிறைவேற்றுவது எங்களது கடமை.

முன்பிருந்தவர்கள், 'தேவையில்லை' என்று விட்டுவிட்டாலும் —அது நன்மை தரத்தக்கதாயிருந்தால்—அப்படிப்பட்ட நல்லவை நடைபெறவொட்டாமல் குந்தகம் செய்ய மாட்டோம் என்பதனை எடுத்துக்காட்ட இந்த தலைநகர் மாற்றம் செய்யப்படுகிறது என்பதை அவர்கள் அறிய வேண்டும்.

வழக்கு மன்றத் தலைநகர்

"மாவட்டத் தலைநகராக காஞ்சிபுரம் ஆனாலும், வழக்கு மன்றத் தலைநகராக செங்கற்பட்டே விளங்கும்'' என்ற செய்தியை வழக்கறிஞர்களுக்கு சொல்லிக் கொள்ள விரும்புகிறேன்.

ஒரு தலைநகரிலேயே எல்லா அதிகாரங்களும் குவியும் நிலை நீடிக்கக் கூடாது; அது ஏற்றதல்ல; சோழ மண்டலத்தின் தலைமையகமாக ஒரு காலத்தில் தொண்டை மண்டலம் இருந்தாலும். துறைமுகப்பட்டினங்களாக மாமல்லபுரமும், சதுரங்கப்பட்டினமும் விளங்கின.

அதுபோல காஞ்சிபுரம் தலைநகராக இருப்பினும், வழக்கு மன்றத் தலைநகராக செங்கற்பட்டு நீடிக்க வேண்டும்.

காஞ்சிபுரம் தலைநகர் ஆவதால் மக்கள் பொறுப்பும் அதிகமாகிறது. இங்கே தொழில் வளம் பெருக—வாணிபம், கல்வி வசதி வளர அதிக வாய்ப்புகள் ஏற்பட வேண்டும்.

மாவட்ட ஆட்சித் தலைவர் சென்னையில் இருந்ததால் காரியங்கள் தாமதமாக நடந்ததென்று மக்கள் கருதலாம். இனி அவர் காஞ்சிக்கே வந்திருப்பதால், வேண்டிய வளர்ச்சிகளை—தேவைகளை விரைவாகவும், விரிவாகவும் அவர் அறிந்து செய்ய வாய்ப்பு ஏற்பட்டிருக்கிறது. சிற்றூர்களுக்கெல்லாம் செல்லும் வாய்ப்பு இருக்கிறது.

வறுமையை ஒழிக்கும் கடமை

வரலாற்றுச் சிறப்புமிக்க காஞ்சியில், இன்று வறுமை தாண்டவமாடுகிறது! நோய் வாய்ப்பட்டவன், முன்பு உண்ட விருந்தை நினைப்பதுபோல், வறுமை வாய்ப்பட்டவர்கள் பழைய நினைப்பை நினைக்கத் தோன்றுகிறது!

அப்படிப்பட்ட வறுமையை ஓட்ட—கைத்தறி நெசவாளர்களும், விவசாயிகளும் தங்கள் தங்கள் தொழில்களை நிலைநிறுத்திக்கொள்ள — வளமான வாழ்வை அவர்களுக்குப் பெற்றுத்தர மாவட்ட ஆட்சித் தலைவரும், பிற அதிகாரிகளும் கடமை ஆற்றவேண்டும்.

கவலைக்கு இடமில்லை!

சிங்காரச் சென்னையிலிருந்து—கடற்கரைக் காற்று வீசும் சென்னையிலிருந்து—பதிவு பெரு ஊழியர்களைக் கதகதப்பான இந்த இடத்திற்கு மாற்றியது பற்றி சிலர் கவலைப்படலாம்.

கடற்கரைக்காற்று இங்கு இல்லை; ஆனால், ஒருபுறம் வேகவதியும், மறுபுறம் பாலாறும் இருக்கின்றன. அவற்றை நீரோட்டம் உள்ளதாக ஆக்கினால், சென்னையைவிடக் குளிர்ந்த காற்றை இங்கேஅனுபவிக்கலாம்.

'வேகவதித் திட்டம்' ஒன்று தீட்டப்பட்டு, என்ன காரணத்தாலோ நிறுத்தி வைக்கப்பட்டிருக்கிறது. இப்போது மீண்டும் அத்திட்டம் பரிசீலனையில் இருக்கிறது; அது நிறைவேற்றப்பட்டால் கடற்காற்றைவிட நல்ல காற்றை அனுபவிக்கலாம்!

சென்னைக் கடற்கரை காற்றை மன்னர்கள் அனுபவித்ததில்லை; ஆனால், வேகவதி, பாலாற்றின் காற்றை மன்னர்கள் அனுபவித்திருக்கிறார்கள். அரசு ஊழியர்களை அப்படிப்பட்ட இடத்துக்கு அழைத்து வந்திருக்கிறேன்.

அரசு ஊழியர்களிடை நிலவும் கவலையைப் போக்கத்தக்க வகையில், வசதியுள்ள வீடுகள் கட்டித் தரவேண்டும் என்றும் உத்தரவிட்டிருக்கிறேன்.''

அமைச்சர் கருணாநிதி பேச்சு

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

மானப்படுத்தி -- அந்த அம்மையாரைத் துகிலுரிந்தார்களே -- அதைக் கேட்கத் துணிவில்லை! வெட்கமில்லை! ரோஷமில்லை!

நிஜலிங்கப்பா முதலமைச்சராக இருந்த மைசூரில் மதுவிலக்கு ஏன் தளர்த்தப்பட்டது என்பதற்கு அவரே காரணம் கூறியிருக்கிறார்—

"வருமானம் குறைந்து விட்டது என்பதற்காக மதுவிலக்கைத் தளர்த்தவில்லை; கள்ளத்தனமாகச் சாராயம் காய்ச்சுவதாலும், சட்டத்திற்கு மதிப்பு அளிக்காததாலும், இலஞ்ச ஊழல் பெருகியிருப்பதாலும், அதிகாரிகள் அமுல நடத்தத் தவறியதாலும் மதுவிலக்கைத் தளர்த்தினோம்''

எனகிறார்.

இதிலிருந்து, காங்கிரசு ஆளும் மாநிலத்திலிருந்து கள்ளச்சாராயம் காய்ச்சுதல, சட்டத்திற்கு மதிப்பளியாமை, இலஞ்ச ஊழல —இவை இருப்பது தெளிவாகிறது.

இத்தனை குறைகளையும் வைத்துக் கொண்டு இங்கே வந்து குற்றம் சாட்டுகிற நிஜலிங்கப்பாவைப் பார்தது, தமிழக அரசின் அமைச்சன் என்ற முறையில் கேட்கிறேன் — எந்த ஆதாரங்களை வைத்துக் குற்றஞ்சாட்டுகிறீர்கள்? தாய்க் குலத்துக்கு எப்போது—எப்படிப் பேராபத்து ஏற்பட்டது? கூற முடியுமா?''

நடக்க இருப்பவை

10--7--68

அலங்காநல்லூர்

தி. மு. க. சார்பில் மாலை 6-மணிக்கு அழகிரி திடலில்; தலைவர்: எஸ். நாகரததினம; பேசுவோர்: ஏ. ஏ. பி. ஆசைத தம்பி எம.எல்.ஏ., பி. எஸ். மணியம் எம்,எல்.ஏ., ஆ. முனியாண்டி எம்.எல்.ஏ., பி. பாண்டியன், கூ. குருசாமி, பாண்டியன், கு. முருகன, சி. வி. சின்னசாமி.

மதுவிலக்கில் உறுதி காட்டும்...

(1-ம் பக்கத்தின் தொடர்ச்சி)

அமுலாக்கப்படுகிறது; 'மதுவிலக்குக் கொள்கை தமிழகத்தில தளர்த்தப்படமாட்டாது' என்று தமிழக முதலமைச்சர் அண்ணா அவர்கள் கூறியிருப்பதைப் பாராட்டுகிறேன்.''

-- ஆசாரியா துளசி

(அனவிரத இயக்கத் தலைவர்)

பேராசிரியர் மயிலை சிவமுத்து மறைவு

அமைச்சர் முத்துசாமி இறுதி மரியாதை

அமைப்புச் செயலாளர் என். வி. நடராசன் தலைமையில் இரங்கற் கூட்டம்

சென்னை, சூலை 8—

முதுபெருந் தமிழ்ப் புலவரும், சென்னை மாணவர் மனறத் தலைவருமான பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள், நேற்று சென்னை அரசினர் போது மருத்துவமனையில் இயற்கையெய்தினார் என்ற செய்தியை மிகுந்த வருத்தத்துடன் தெரிவித்துக்கொள்கிறோம்.

எழுபத்தாறு வயதுடைய பேராசிரியர் மயிலை சிவமுத்து அவர்கள் நேற்றைக்கு முந்திய நாள் தான் உடல்நலம் குன்றி, மருத்துவமனையில் சேர்க்கப்படடார். நேற்று அதிகாலை உயிர் பிரிந்தது.

பேராசிரியரின் மறைவுச் செய்தி கேட்டு, தமிழ்ப் புலவர் பெருமக்களும், எழுத்தாளர்களும், தமிழன்பர்களும ஏராளமானவர்கள் தங்கள் இறுதி வணக்கத்தைத் தெரிவித்துக்கொண்டனர்.

உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு. மா. முத்துசாமி அவர்கள், பேராசிரியரின இல்லம் சென்று, மலர் வளையம் வைத்துத் தமது மரியாதையைத் தெரிவித்துக் கொண்டார். புரட்சி நடிகர் எம். ஜி. ஆர். சாரிபிலும் மலர் வளையம் வைக்கப்பட்டது.

நேற்று மாலை, மூலக்கொத்தளத்தில் உள்ள இடுகாட்டில், உடல் எரியூட்டப்பட்டபின், இரங்கற் கூட்டம் நடைபெற்றது.

கழக அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி. அவர்கள் தலைமை வகித்தார்.

தோழர்கள் ஜி. குசேலர் எம்.பி., எம். ஆர். கண்ணன் எம்.எல்.ஏ., மாவட்ட தி. மு. க. செயலாளர் நீலநாராயணன, மற்றும் தமிழ்ப் பேராசிரியர்கள் பலரும் மயிலை சிவமுத்து அவர்கள் தமிழுகத்கும், தமிழ் மக்களுக்கும் செயதுளள அரும் பெருந் தொண்டுகளையெல்லாம் குறிப்பிட்டுப் பேசினார்கள்.

இரயில்வே பயர்மென்கள் உண்ணுநோன்பு

என். வி. நடராசன் கண்டு பேசினார்

தஞ்சை, சூலை 6—

இங்கு டி. எஸ். அலுவலகத்தின் முன் பயர்மென் கவுன்சிலின் சார்பாக நடந்துகொண்டிருக்கும் உண்ணுநோன்புப்போராட்டத்தை நாடாளுமன்ற உறுப்பினர் திரு. கே. அனந்தன் நம்பியார், தி.மு.க. அமைப்புச் செயலாளர் திரு. என். வி. நடராசன் எம்.எல்.சி., திரு. ராங்குசம் எம்.எல்.சி., மற்றும் திரு. சீனிவாசன் ஆகியோர் நேரில் கண்டு, உண்ணுநோன்பு மேற்கொண்டுள்ள தோழர்களை வாழ்த்தியும், அவர்களது நியாயமான ஏழு அம்சக் கோரிக்கைகளை ஆதரிததும், இப்போராட்டத்தின் நிலைமையைத் தமிழக முதலமைச்சருக்கு எடுத்துக்கூறி ஆவன செய்வதாகவும் கூறினர்.

ஆர்.எம்.எஸ். ஊழியர் சங்க ஆண்டு விழா

அனைத்திந்திய ஆர்.எம்.எஸ். 3-வது வகுப்பு ஊழியர் சங்க 12-வது ஆண்டு விழா, 10-7-68 மாலை விழுப்புரம் ஆஞ்சநேயர் கோயில் கலையரங்கில் நடைபெறும்; தலைவர்: எஸ். கருணானந்தம்; பேசுவோர்: அமைச்சர் செ. மாதவன், வி. கிருஷ்ணமூர்த்தி எம்.பி., கோ. விசுவநாதன் எம்.பி., மு. தெய்வீகன் எம்.பி, மாயவன் எம்.பி., எம். சண்முகம் எம்.எல்.ஏ., சி. நம்மாழ்வார்.

வரலாற்றுப் பெருமை...

(2-ம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்டம் முழுவதிலுமிருந்தும் பல்லாயிரக்கணககான மக்கள் திரண்டு வந்து விழாவில் பங்கேற்றனர்.

'ரோட்டரி கிளப்' விருந்து

மாவட்டத் தலைநகர் காஞ்சிக்கு மாற்றப்பட்டதையொட்டி காஞ்சி ரோட்டரி கிளப், முதலமைச்சருக்கு விருந்து அளித்தது.

இவ்விருந்தில் முதலமைச்சர் அண்ணா அவர்கள் பேசுகையில், 'மாவட்டத்தில் குடும்பக் கட்டுப்பாட்டுப் பிரச்சாரததுக்காக அரசுக்கு ஒரு 'வேன்' நன்கொடையாக அளிக்குமாறு 'ரோட்டரி கிளப்'பை கேட்டுக் கொண்டார்.

கிளப் தலைவர் ஏ. எல். செல்வராஜ் முதலமைச்சரையும், இதர அமைச்சர்களையும் வரவேற்றார்.

தீ விபத்து நிவாரண நிதிக்கு நன்கொடையாக அவர் ரூ. 1,500-க்கான 'செக்'கை முதலமைச்சரிடம் கொடுத்தார்.

செயலாளர் கே. வி. விசயராகவன் நன்றி கூறினார்.

கலெக்டர் அலுவலக ஊழியர்களுக்கு முதலமைச்சர் அண்ணா விருந்து அளித்தார்.

'லயன்ஸ் கிளப்' வரவேற்பு

முதலமைச்சருக்கும்,இதர அமைச்சர்களுக்கும் காஞ்சி 'லயன்ஸ் கிளப்' வரவேற்பு அளித்தது; இந்த விழா ஆண்டர்சன் உயர்நிலைப் பள்ளியில் நடந்தது.

காஞ்சி மத்திய பஸ் நிலையத்தில் குடிநீர்க் குளிர்விப்பு சாதனம் ஒன்றை லயன்ஸ் கிளப் அமைக்குமென்று இவ்விழாவில் அறிவிக்கப்பட்டது.

ரூ. 6,000 செலவில் இது இன்னும் ஒரு மாத காலத்தில் அமைக்கப்படும்.

லயன்ஸ் கிளப் தலைவர் டாக்டர் ஜோசப் பிச்சமூர்த்தி, அனைவரையும வரவேற்றார்.

மாவட்ட லயன்ஸ் உதவி கவர்னர் கே. ஆர். சுந்தரராசன் பேசினார்.

செயலாளர் கே. எஸ். செல்லப்பா நன்றி கூறினார்.

திராவிட முன்னேற்றக் கழகத்திற்காக, திரு. இரா. செழியன் எம்.ஏ., எம்.பி., அவர்களை ஆசிரியராகவும், வெளியிடுபவராகவும், அச்சிடுபவராகவும் கொண்டு அழகிரி அச்சகத்தில் (24, சூரியநாராயண செட்டித் தெரு, சென்னை-13) [illegible]